(இ) சென்னை, கொல்கத்தா, திருச்சி மற்றும் தஞ்சாவூரில் செயல்பட்டுவரும் பூம்புகார் விற்பனை நிலையத்தினை நவீனமயமாக்கி அழகுபடுத்துதல், சென்னையில் ஒவ்வோர் ஆண்டும் உலக அளவிலான கண்காட்சி நடத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின்மூலம் நடப்பாண்டில் செயல்படுத்தவிருக்கும் அறிவிப்புகளை இப்பேரவையில் வெளியிடுகிறேன்.*

1. உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வாடிக்கையாளர்களைக் கவரவும், சந்தை வாய்ப்பினைப் பெருக்கவும், விற்பனை நிலையங்களைப் புதுப்பித்து நவீனமயமாக்கும் நோக்கில், சென்னை, கொல்கத்தா, திருச்சி மற்றும் தஞ்சாவூரில் செயல்பட்டுவரும் பூம்புகார் விற்பனை நிலையங்கள், ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பொலிவு பெற அழகுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. பூம்புகார் நிறுவனம் சார்பில் நடப்பாண்டு முதல் உலக அளவிலான கண்காட்சி ஒவ்வோர் ஆண்டும் சென்னையில் நடத்தப்படும். சர்வதேச வர்த்தக நிறுவனங்களான இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் மற்றும் கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் உடன் இணைந்து, இக்கண்காட்சி 2 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) *கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைவினைப் பொருட்களுக்கு மிகச் சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும், வருவாயைப் பெருக்குவதற்கும், ஏற்றுமதியை அதிகரிப்பதற்கும் மற்றும் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கும் இக்கண்காட்சி வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)